72

[illegible]

[illegible]

ACL - TNAG
00088

[illegible]23:417
N24
181923

122

4 - JAN 1924

ஸ்ரீ சற்குரு துணை

திருக்காநிலம் பதியில்

திருக்கோவில் கொண்டெழுந்தருளியிருக்கும்

சச்சிதானந்த சொரூபியாகிய

ஸ்ரீ சற்குருஸ்வாமிகளின் பேரில்

# குருலிங்கப் பதிகம்.

இஃது

திருவண்ணாமலை தாலுக்கா

வள்ளிவாகை கிராமத்திலிருக்கும்

ஞானதீபம் நா. ஆறுமுகப்பிள்ளை அவர்களால்

இயற்றப்பட்டு

கனவான்களின் பொருளுதவியைக் கொண்டு


இராஜூப்பிள்ளையால்

...ப்புரம்

...லையில் பதிப்பிக்கப்பெற்றது

Q23:417
M24
181973

ஸ்ரீ சர்க்குரு துணை.



# ஸ்ரீ சர்க்குருஸ்வாமிகளின் பேரில்

# குருலிங்கப்பதிகம்.

## காப்பு.

திருவுரையுமேடச் சிகரியடிவாழும்
குருலிங்கர்மேற்பதிகங் கூறவே—கருணையுடை
தந்திமுகத்தைந் துகரத் தர்ப்பரனேயுன்றனுடைய
சுந்தமலர்ச்செஞ்சரணே காப்பு.

திருவல்லாபுரத் துவிஜகுலமாதவத்
    தேயவதரித்த ஞானத்
தீபமே தொல்வினை களைந்து மேல் வருபவந்
    தீர்ந்த நிற் குண மேருவே
துருவதன்மைக் கொண்டு சருவ மொன்றாய்க்கண்ட
    துவிதாத்து விதரூபமே
தூயமறையந்தமே கண்டாவ கண்டமே
    தோற்றமறை வற்றபொருளே
கருவிநிரவரியரப் பிரமாதியாகவிக்
    காசினிபுரக்கு மருளே
காருண்யவிவனையாள னந்த நாராயணக்
    காரணக்குரு மூர்த்தமே
மருவமற்றுறணிச் செம்மலற்றுடந்து
    மைந்தனெனையே யாளுவாய்
மானிலந்துதிசெயுங்கானிலம் பதியில் வளர்
    மௌனசற் குருலிங்கமே, 1.

கலிசூழுலகமதை வலம்வந்த நற்பதம்
காசினிவணங்கும் பதம்
காசியே யாதிபல புண்ணியத் தலமெலாங்
கண்டு நடமாடிய பதம்
புலியாதி மிருகமுறை பலமலைக்குகை நிட்டை
போய் செய்த செம்பொற்பதம்
பூசைபுரியடியவர்கள் சாத்தியே கசந்திவிடு
பூற்றபூம் பெரியபதம்
சலியாது பணிசெயுந் தொண்டருளவிருணீக்கி
சாயுச்சிய மீயும் பதம்
சாந்தமேவுருவான சிவமென்ன வொளிர்ஞான
சற்குருவின் மேலாம் பதம்
மலிவாவிளங்கியிடு மகிமையுடைபதநாதன்
வடிவாயுதித்தோங்கிடும்
மாணிலந்துதி செயுங்காணிலம் பதியில் வளர்
மௌனசற் குருலிங்கமே 2.

மேடாசலத்தடியில் வாடாத மலர்சூடி
    மெய்யன்ப ரேற்று லிங்கம்
மெய்ஞ்ஞான வழிகாட்டி அஞ்ஞான விருளோட்டு
    மேலான பரண லிங்கம்
நீடாழியுலகத்து தேடாத மணி என்ன
    நேர்ந்திட்ட சாந்த லிங்கம்
நித்தமுந்துதிசெயும் பக்தருக்குற்றதுயர்
    நீக்குமென் சித்திலிங்கம்
கோடான கோடியுடலோ டுழலு மடியவர்
    கொடும்பவம போக்கு லிங்கம்
கொல்லவரு நடுவனிட வல்லமைக் கெடஞான
    கோடறிக் கொண்ட லிங்கம்
மாடான வரிபிரமனாதியோர் காணாத
    மாட்சிமைக் கொண்ட லிங்கம்
மானிலத்துதிசெயுங் காணிலம்பதியில்வளர்
    மௌனசற் குருலிங்கமே 3.

சந்ததமுமெந்தனிட சிந்தைதனிற்குடிகொண்டிட்ட
சன்மார்க்க முற்றகுருவே
சத்துசித்தானந்த வடிவாய்நிறைந்தொளிர்
சர்ச்சனர் வணங்குகுருவே
கந்தரங்கவிழுமிருளனமுடமாயை கெட
கதிரென விளங்குகுருவே
கதியடையநின்னடித் துணைபலால்வேருவழி
காண்கிலேனுண்மை குருவே
பந்தமறவாண்டெனது மலதிமிரநீக்கியருள்
பாலியும் பரமகுருவே
பத்திவழிநிலைநின்ற முத்தரிருதயமதில்
பரிந்துநடமாடுகுருவே
வந்துதொழுமன்பரை வழியடிமைகொளலிங்க
வடிவாயமர்ந்தகுருவே
மானிலந்துதிசெயுங் காளிலப்பதியில்வளர்
வெள்ளைசற்குருலிங்கமே 4.

அதிகாரணபிரம நின்னருள் வெளிக்குளே
ஆகிலமாஞ்சத்திதோன்றும்
அந்தநாளைத்தொட்டு இந்தநாள்வரையிலும்
அடியேன் பவத்தை எண்ணி
சோதிக்கவென்னிலீ தாற்குதாளுகுமோ
துகையிட விலக்கமுளதோ
தோன்றுசுகதுக்க மீதாறல்விளைந்ததோ
தோதக மனத்திறலோ
ஞ்திக்கியென் செய்வே நிப்பவம் வந்ததும்
போகுப்வழி காட்டிடா வேல்
புங்கவாநீயுள்ள போது நானுளநுனை
போகவர விடவுமாட்டேன்
வாதித்து வென்னுளத்துந்தனைக்கட்டுவேன்
மரவாபலெலனையாளுவாய்
மானிலந்துதிசெயுங் காணிலம்பதியில்வளர்
மௌனசற் குருலிங்கமே 5,

அடியனெனைவா வென்றழைத்துமதிசொல்லியே
அன்புவைத் தாளொணாதோ
ஐம்புலக்கள்வரெனதுளமேபோத பொருள்கொண்
டடித்தோட்ட நீதிதானோ
கொடியநிரயத்தினி லடியேன்படிந்திடில்
கூடுவதுமக் கென்னமோ
குணசாந்தரென்னவே கொண்டபேற்கிவையெலாங்
குறைவென்ப தரியாததோ
படியினிற்றுன்பத்து ளாக்கி யெனையழவிடல்
பழிவந்து சார்ந்திடாதோ
பட்சம்வைத்தூழ்வினைப் போக்கிரட்சித்தெனை
பரிசுத்த னாக்குமையா
மடியிலாவண்ணமெனைக் காற்றிடுங்காற்றிடும்
மாய்கை சம்மாரதேவா
மானிலந்துதிசெயுங் காணிலம்பதியில்வளர்
மௌனசற் குருலிங்கமே 6

எத்தனைச்சொல்லியுஞ் சித்தமதிரங்கா
இருப்பதா லேழைபங்கா
என்னுளத்தைக்கட்டிப் புலவேடர் கைக்கொண்
டிழுத்துவெளி கொண்டுவந்து
குத்தியேயிச்சையாங் கள்ளைக்குடிப்பித்து
கோதையர்கள் சின்னமாகுங்
கொலைக்களத்துள்ளெனைக் கொண்டேகுறுறிந்த
கொடுமைக்கு என்னசெய்வேன்
கத்தியால்வெட்டுண்ட புண்ணைபமாதறுர்
கடிதடத்திச்சை மாற்றி
கதியடையும்வழிதன்னை யிதுவெனக்காட்டியருள்
கருணாகரக் குருபரா
மத்திடுந்தயிரெனச் சித்தங்கலங்கியே
மாளாமலென்னை யாளுவாய்
மாணிலந்துதிசெயுங் காணிலம்பதியில்வளர் 7
மௌனசற்குருலிங்கமே

உருவிலியின்மாடத்தை எருவிடுந்தோர்ப்பையை
    ஒழிகிடுமலக் கேணியை
உணவதுவிலாவிடத் தோர்செயலுமின்றியே
    ஓய்ந்திடு மரப்பாவையை
இருவினைச்சுழல்காற்றி லாடுகாற்றாடியை
    இச்சைவழி செல்லுருளையை
ஈரும்புகள்மொய்த்த சோரிசேர்பாண்டத்தை
    ஈமத்திலெரி கட்டையை
கருவிலுருகிருமியை மாயையலைகப்பலை
    காலனுடை மட்கலத்தை
கண்படையில்விட்டிடும் பெட்டியைநானென்று
    கருதினேன் பேதைமதியால்
மருவணிக்குருபரா வென்மதிபோக்கியே
    மலரடித் தந்தாளுவாய்
மாநிலந்துதிசெயுங் காநிலம்பதியில்வளர்
    மௌனசற் குருலிங்கமே ௮

அந்தரந்தனிலாவி யாகிசிலநாளிருந்
தாலமாய்த் தரையில்வீழ்ந்து
அகிலசத்தாகிகூ ழாகிவித்தாகியே
அன்னமுஞ் சாரமாகி
தந்தையுடறங்கிசுக் கிலமாகியதைவிட்டு
தாய்சோணிதங் கூடியே
தங்கிகருவாகியா சயநெறுக்காநொந்து
தாணிமிசை வீழ்ந்தேங்கிடும்
இந்தபிரவித்துயர் கொஞ்சமோவையனே
ஈதன்றி மரணகாலத்
தெய்திடும்வாதனைக ளார்படுவதம்மம்ம
வென்றார்சகிக்க வசமோ
மைந்தனெனையாட்கொண்டு பவவினையைமாற்றுவாய்
மாதவற் றொழுபாதனே
மானிலந்துதிசெயுங் காணிலம்பதியில்வளர்
மௌனசற் குருலிங்கமே 9

சாதுசங்கங்கூடி பழகியறியாமூடன்
சாந்தமில்லாத மூடன்
தர்மாதர்மங்களை யறியாதமுழுமூடன்
சாஸ்திரமறியாத மூடன்
சூதுசெய்பாதகன் பரமாதரைக்கூடி
சுகமனுபவித்த துட்டன்
சூழ்புவியிலடியவரை தூஷித்தபாவிநற்
றொண்டுசெய் யாதபாவி
சேதுமுதல்திவ்வியப் பதிசெலாப்பாவியுன்
றிருவடியில் வந்தடைந்தேன்
தேசிகாநின்கடைக் கண்ணருட்டந்தெனது
தீவினைதவிர்த் தாளுவாய்
வாதுசெய்துட்டரால் காணொணாமெய்யனே
மாதவற் கனுகூலனே
மாணிலந்துதிசெயும் காணிலம்பதியில்வளர்
மௌனசற் குருலிங்கமே 10

# கும்மி.

கும்மியடிப் பெண்கள் கும்மியடி ஞானக்
குருலிங்கரைப் போற்றிக்கும்மியடி
நம்மையாளுந் திருக்கானிலம் வாழ்குரு
நாதர் புகழ்பாடிப் போடுங்கடி 1

சர்க்கரை முக்கனித் தேங்காயுங்கொண்டு
சன்னதி முன்பாகத் தான்படைத்து
அக்கறையாகவே சற்குருலிங்கத்தை
அன்பாகப் போற்றியடியுங்கடி 2

பேர்பெரும் வல்லாபுரத்தில் பிறந்தார்
பிரம்மகுலத்திற் குருலிங்கம்
ஆர்பெறுவாரிம்மகப் பேற்றையவ
ரன்னைதந்தையர்கள் புண்ணியமாம் 3

புண்ணியமெல்லாந் திரண்டுருவாகப்
பிறந்த நமது குருலிங்கர்
கண்ணனூர் மௌனகுருவருளைப்பெற்று
காசினியை வலஞ் செய்தாரே 4

வல்லாபுரம் விட்டு தொல்பவங்கடந்து
வாரொன்னவே சற்குருலிங்கர்
நல்லச் சேர்வருய கல்லடியாஞ் சேல
நாட்டிர்சிலநாள்வசித்திருந்தார் 5

பின்றுமிமாலய பத்ரிநாருயணம்
பிரம்மகபாலங் குருலிங்கர்
நன்னெறிகேதாரப்பதியதையுங்கண்டு
நாடியங்குபல நாளிருந்தார் 6

அரித்துவாரங்கங் கோத்ரியமுனோத்ரி
அயோத்திமேப்பாலங் குருலிங்கர்
சரிவரக்கண்டங்கு நின்றுசிலகாலம்
தான்வசித்தாரே சகிமாரே 7

ஆச்சர்யமல்லவோ சோதரிமார்களே
அப்புரமந்தக் குருலிங்கர்
மாச்சரியமற்ற காசிகயாவிட்டு
வந்தாரோதென்னருணைப்பதியில் 8

அருணைமலைக்குகைநிட்டைசெய்துக்கொண்டு
அங்கேயிருந்தக் குருலிங்கர்
கருணையுடன்றிருக் காணிலமும்வந்து
கந்தருக்காலயங் கட்டினரே 9

போளூரில்சென்று விடோபாவின்பொன்னடி
போற்றிப்பின்னிந்தக் குருலிங்கர்
கேளூரங்கடிதுரிஞ் சாபுரத்தேதளி
கீர்த்தியுறவொன் றியற்றினரே 10

அம்மம்மவெல்லூரும் மெய்யூருங்கண்டா
ரப்புரமிந்தக் குருலிங்கர்
செம்மையாங்காரைக்கால் நாலரங்கட்டளை
சென்றுமடாலயந் தங்கினரே 11

இல்லைப்பதிக்கண்டு தொல்லைவினைகளை
தீர்க்கவெண்ணிக் குருலிங்கர்
வல்லவருகிய பல்லடியார்க்கருள்
வாக்களித்துமடம் போக்கினறே 12

நாலரங்கட்டளை விட்டாரேபின்பு
நாம்கடைத்தேரக்கு குருலிங்கர்
பேலாங்கானில முற்றுறேஇங்கு
மெய்வடிவே லிங்கமானுறே 13

ஆதிநாராயண மூர்த்திக்கருகே
யநந்தநாறுயண மூர்த்திலிங்கம்
சோதிமயமா விளங்குதிதைவலம்
சூழ்ந்துகும்மி யடியுங்கடி 14

மேடமலையடி வாரத்திலேதினம்
மெய்யடியார்கள் தொழுதேத்தி
பாடவிளங்கும்பர பிரம்மத்தைவாழி
பாடிக்கும்மி யடியுங்கடி 15

ஆதிநாராயண பிரம்மமும்வாழி
அனந்தநாராய ணரும்வாழி
சோதிசேர்மேடக் கிரிவள்ளிதெய்வானை
சுப்பிரமண்யதேவ ரும்வாழி 16

# ஸ்ரீசற்குருஸ்வாமிகள் பரிபூரணம் அடைந்தநாள்.

கடையுகத்தையாயிரத்திருப தொடுநாலு
கனருத்திரோத்காரியில்
கன்னிமதிபுதவார மிருபதிருநாட்
கதித்தசுக்கில பிரதமை
நடையுடையவரடைநன் ஞானிலைகண்ணையவர்
ஞானகுருவின் மரபிலே
நற்றெருண்டருய்நிட்டை சாதனைத்தேர்ந்திந்த
ஞாலந்துதித்த முத்தன்
தொடையணித்திண்டோ ளனந்தநாராயணத்
தோன்றலென் சற்குருபரன்
தூயமாதவர்கள்வாழ் காளிலப்பதியில் வளர்
சேலைசூழ் மேடவைபால்
இடையினின்மாயைவழி யாதுதித்திதாரு
மின்னறரு மிருவினையைதீர்த்
தொசார்த்தசைதன்யோக சிவலிங்கவடிவா
எழுந்தே யமர்ந்தாரரோ

காணிலப்பாடி கிராமத்தில் எழுந்தருளியிருக்கும் மேடா
ஜல சுப்ரமண்யஸ்வாமி பேரில் கீர்த்தனை

இராகம் பல்லவி தாளம்

எப்போதுன்னருள்வருமோ முருகா வென்மீ
தெப்போதுன் னருள்வருமோ

அ. வி.

முப்போதமரர்கள் பணியுமேடாஜலத்தின்
முடிமீதுநடமிடும் வடிவேலேந்துறையே (எ)

சரணம்.

அப்பாயிப்புவியில்நான் அலைவதுகாண்கிலையோ
அதுவும்வினைஎன்றுனு மகற்றுவதுமலையோ
செப்புஞ்சிவனுப்வினை செய்விப்பானும்பின்னையோ
செகதீசனுயூழுட்டு கிர்பானும்நீயல்லவோ.

சுருள்.

தேவாவருத்தலாலே— ஆவதென்னவதனாலே
சேவைசெய்யவாசையாலே–கூவுகின்றநாயேன்மேலே (எ)
சோதிப்பதுதகாது சூரர்குலகாலனே
சொல்வதென்னகேட்கிலையோ சுப்ரமண்யவேலனே

ஏதித்தனைகொடுமை ஏழைமீதுநாதனே
என்கடவுணீயில்லையோ ஈடிலீசபோதனே.

சுருள்.

ஈராருதோளொளிவிட—சூரமயின்டமிட
வராய்வினைபொடிபட—கூராதஓர்மொழியாட (எ)

அவினிசராசரங்கள் பாவுமுறைமையன்றிஏது
அதிலடியேனுமல்ல லன்னியமோவிதையோது
தவந்தாஞமாவாவிலை தந்ததுநீரானபோது
சாருஞ்சுகதுக்கமிங்கு தமியேனையடையாது

சுருள்.

சாற்றியதிதுவென்றெடாய்யா—மாற்றுவாய்பிரவி அய்யா
பூர்த்தொளிர்தாளிணைமெய்யா-போற்றினேன் பன்னிருகைய்ய
பாரேத்தமேடமூர்ந்து பவனிவந்திட்டவா
பங்கஜஞதிதேவர் பயந்தவிர்த்திட்டவா
சிரேத்துவள்ளிதெய் வானைக்கைதொட்டவா
திருவடிகளைத்தந் திடவெந்தன்கிட்டவா,

சுருள்.

தீராபவத்தையெய்யா—வாராதருளுந்துய்யா
ஈராருமார்க்கையைய்யா—ஓராறுமுகத்தையா (எ)

## ஸ்ரீசர்க்குருஸ்வாமிகளின் குரு பூசைதினம்:

முன்னைக்கண்ணனார் மோனர்மொழிகொண்ட
தன்னையொத்திடு சற்குருஸ்வாமிகள்
கன்னிசித்திரை யாங்கனனாளிலே
தன்னுருவாந் தனைக்கலந்தாரே

தனதான தனதான தனதான

சிவஞ்ஞான குருவாழி பதிவாழி
திருமேட கிரிவேல ரடிவாழி
நவவீர பொருகோட ருடுவாழி
நதிவசணி கலைவாழி திருவாழி
பவநாச பரமேச ரடிவாழி
பரைவாழி மரைவாழி திரைவாழி
தவதான மடியாரு மிகவாழி
சசிவாழி ரவிவாழி புவிவாழி.

குருலிங்கப்பதிகம் முற்றிற்று.

சற்குருஸ்வாமிகள் திருவடிகளே சரணம்

# விளம்பரம்

பொருளுதவிசெய்த கனவான்கள்,

மகா-௱௱-ஸ்ரீ A, ரங்காசெட்டியார் அவர்கள் அய்ங்குணம் மணியம்

,, ரா. கிருஷ்ணப்பசெட்டியாரவர்கள்,

,, ரா. அ கண்ணுசெட்டியாரவர்கள்.

,, பா. தாண்டவராயபிள்ளையவர்கள்.

,, கோ. துரைசாமிநாயகரவர்கள்.

,, அப்புபிள்ளையவர்கள் கர்ணம்.

,, நா. குப்பக்கவுண்டரவர்கள்.

,, சின்னவேடிச்சிக்கவுண்டரவர்கள்,

இப்புஸ்தகமும் ஸ்ரீ சற்குருஸ்வாமிகளால் இயற்றப்பட்டுள்ள புஸ்தகங்களும் சற்குருஸ்வாமிகளின் போட்டோபடங்களும் தேவையுள்ளவர்கள் கானிலப்பாடி சற்குரு ஸ்வாமிகள் மடத்திலும் அடியில் கண்டவர்களிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

**S இராஜப்பிள்ளை வள்ளிவாகை**
**S. குருஸாமிபிள்ளை கானிலப்பாடி**
திருவண்ணாமலை போஸ்டு

1306-500-23